THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Friday, the 28th February 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Ban on movement of gur

*66 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Hon. the Minister for Food of the Government of Tamil Nadu has insisted at the Food Ministers' conference held recently at Delhi that the export of jaggery to other States from Tamil Nadu should be banned; and

(*b*) the reply given thereto on behalf of the Central Government ?

பிற மாநிலங்களுக்கு வெல்லம் அனுப்ப தடை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்திலிருந்து வெளி ராஜ்யங்களுக்கு வெல்லம் அனுப்ப தடை போட வேண்டுமென உணவு அமைச்சர்கள் மகாநாட்டில் தமிழக உணவு அமைச்சர் அவர்கள் அண்மையில் வற்புறுத்தினரா ?

(இ) அதற்கு மத்திய அரசு சார்பில் என்ன பதில் கூறப்பட்டது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) தமிழ்நாட்டிற்கு வெளியே வெல்லம் அனுப்புவதற்குத் தடை விதிப்பதற்காக இந்திய அரசின் இசைவினை வேண்டி இவ்வரசாங்கம் பல முறை வற்புறுத்தி வந்திருக்கிறது. அண்மையில், டில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய உணவு-முதல் அமைச்சர்கள் மாநாட்டில் இதையே மீண்டும் முன்னாள் உணவமைச்சர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். இருப்பினும், இந்திய அரசு தங்கள் இசைவைத் தருவதற்கான வழி ஏதும் காணாதது வருந்தத் தக்கதாகும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த வெல்லத்தை வெளி ராஜ்யங்களுக்கு அனுப்புவதைத் தடை செய்ய வேண்டுமென்று அடிக்கடி நம் ராஜ்யத்திலிருந்து கூறிக்கொண்

[28th February 1969

டிருப்பதால் வெல்லத்தின் விலை வெகுவாகக் குறைந்துவிட்டது. அதனால் வெல்ல உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரூ. 60-க்கு விற்ற வெல்லம் இப்போது ரூ. 40-க்கு விற்கிறது. ஆகையால் தாராளமாக வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று இனிமேலாவது அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்போது இருக்கிற நிலையில் வெளியே வெல்லம் போவதற்குத் தடை எதுவும் இல்லை. ஹைகோர்ட் தீர்ப்பும் அதற்கு பாதகமாக இல்லை. ஆனால் வெல்லம் உபயோகிப்போர் எண்ணம் விலை ஏறியிருக்கிறது என்பதுதான். இதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

Government Agricultural Colleges

*67 Q.—Thiru M. SANKARALINGAM PILLAI (on behalf of Thiru V. ISVARMURTHI): Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the extension work done by the Government Agricultural Colleges by way of taking the latest findings of improved Agricultural practices to the doors of the farmers?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: வேளாண்மைத்துறை வெளியிடும் திங்கள் இதழான "மெழிச்செல்வம்" மூலமாகவும் "வேளாண்மை ஆராய்ச்சி" என்னும் ஆண்டு இதழ் மூலமாகவும் கையேடுகள், சிறு வெளியீடுகள் மூலமாகவும் ஆராய்ச்சி கண்டு பிடிப்புகள் பரந்து விளம்பரப்படுத்தப்படுகின்றன. இத்துடன், வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி நிலையம் நிர்வகிக்கும் மத்தியப் பொருட்காட்சியை உழவர்கள் பார்வையிடுகின்றனர். வளர்ச்சிப் பிரிவினர் வேளாண்மைக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் சிறப்பாகத் தயாரிக்கின்றனர்; இவற்றை, வளர்ச்சிப் பிரிவின் பல பணியாளர்களிடை பரப்புவதற்காகத் தமிழ்நாடு வேளாண்மை இதழில் வெளியிடுகின்றனர்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பஞ்சாபில் சர்க்கார் நடத்துவது போல, விவசாயிகளுடைய மகாநாடுகள் நடத்தி அங்கே இந்த மாதிரி புது விஷயங்களை எடுத்துச் சொல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மாவட்ட அளவில் உழவர்களைக் கூட்டி மகாநாடு நடத்துகிறோம். ஆராய்ச்சியாளர்களை வைத்து மகாநாடு நடத்த வேண்டுமென்று சொன்னால் அதையும் யோசிக்கலாம். கருத்தரங்கங்கள் விளம்பரங்கள் கண்காட்சிகள் முதலியன அமைக்கப்பட்டு விளக்கங்கள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப் படுகின்றன.

திரு. வி. கே. ராமசாமி முதலியார்: எக்ஸ்டென்ஷன் ஆபீசர், டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசர் மற்றும் கீழே உள்ள ஆபீசர்கள் பூராவும் கிராமங்களைச் சுற்றி வருவதில்லை. விவசாயிகளுக்கு வேண்டிய செய்திகளை, பூச்சி மருந்து போடுவது, விதைகள்